யில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இந்தப் பள்ளியை துரிதமாக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட தனியார் பள்ளிகளில் சில ஆசிரியர்களிடம் 5 ஆயிரம், 2 ஆயிரம் என்று பணத்தை வாங்கிக் கொண்டு வேலைக்குச் சேர்க்கிறார்கள். பிறகு ஓராண்டு 10 மாதம் கழித்து நீக்கி விடுகிறார்கள். இந்த நிலை இருப்பதால் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பள்ளி பற்றி அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசை நான் வற்புறுத்துகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்</u>: நீக்கப்பட்ட ஆசிரியர்கள் முறைப்படி முறையீடு செய்வார்களானால், சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மற்ற யோசனைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

6. ஒழுங்குப் பிரச்சினைகள்.

முதலமைச்சர்கள் மகாநாட்டின் முடிவுகளை முதல்வர் அவைக்கு அறிவிக்காததும், அவைக்கு வராததும் குறித்து.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u>: பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், டெல்லியிலே முதலமைச்சர் மாநாட்டிற்கு சென்று வந்தார்கள். முதலமைச்சர் மாநாட்டில் என்னென்ன தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டன என்பதை இந்த அவைக்கு அவர்கள் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொல்வதும் இல்லை. அவர்கள் இந்த அவைக்கு வரவும் இல்லை. அதற்கு என்ன காரணம் என்பதை இந்த அவையிலே அறிவிப்பீர்களா ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: அவர்களுக்கு உடல் நலம் சரியில்லாத காரணத்தால், அவர்களுடைய அலுவல்களைக்கூட அவை முன்னவர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நாளை வரும்போது, நீங்கள் கேட்ட தகவல் அவரிடம் இருக்குமானால் பதில் சொல்வார்கள்.

7. 1977-78 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: ஏறக்குறைய 26 பேர்கள் பேச வேண்டும். அதிலே குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர்களிலே சில பேர்கள்—முக்கியமானவர்கள்—பேச வேண்டும்.